அறுவடை

விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழுங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு - வடமாகாணம்

කෘෂිකර්ම හා ගොවිජන සේවා, සත්ව පාලන, වාරිමාර්ග, ධීවර, ජල සම්පාදන සහ පරිසර අමාත්‍යාංශය- උතුරු පළාත

Ministry of Agriculture and Agrarian Services, Animal Husbandry, Irrigation, Fisheries, Water Supply & Environment
Northern Province

அறுவடை

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் காலாண்டு இதழ்

விதை 01 | 2023 | அறுவடை 01

e mail : mediamagri@gmail.com பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 221 7306

வடமாகாண ஆளுநர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வட மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகினால் சர்வதேச மண் தினத்தையொட்டி விவசாயிகள், பண்ணையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விவசாயத் தகவல்களை வழங்கும் நோக்கில் வெளியிடப்படும் "அறுவடை" சஞ்சிகைக்கான வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச் சஞ்சிகை ஊடாக விவசாய அமைச்சினதும் அதன் கீழுள்ள விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் மற்றும் நன்னீர் மீன்பிடி அலகு ஆகிய வற்றின் சேவைகள் பற்றியும் சூழலோடு இணைந்த முறையில் நவீன தொழில்நுட்பத்தினூடாக உச்சப்பயனைப் பெறும் முறை பற்றியும், இலகுவான முறையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது.
இவ்வாறான முயற்சிகள் மேன்மேலும் பெருக வேண்டும் என்பதோடு மக்களின் விவசாய நடவடிக்கைகள் அதிகரித்து அதன் மூலம் எமது நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைய இச் சஞ்சிகை வழியமைக்கும் என்பதில் ஐயமில்லை.

இதுபோன்ற ஆக்கங்களை தொடர்ச்சியாக வெளியிடுவதன் மூலம் தங்களது பணி மேலும் சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ.எஸ்.எம். சார்ள்ஸ்
ஆளுநர்
வட மாகாணம்

வடமாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் வழிநடத்தலுடன் சுற்றாடல் அலகினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வதேச மண் தினத்தினை அநுசரிக்கும் நோக்கோடு வெளியீடு செய்யப்படுகின்ற அறுவடை என்னும் சஞ்சிகை மிகவும் பயனுறுதி வாய்ந்ததொன்றாகும்.

பூமிக்கான இயற்கையின் நற்கொடைகளில் ஒன்றான மண்ணும் அதன் வளமும் செழிப்பும் குறையாது பாதுகாக்கப்படுவது ஒவ்வொரு பிரஜையினதும் முக்கிய கடமையாகும். நோக்கத்திற்காக மட்டுமன்றி இயற்கையாகவே மண்ணோடு இசைந்துள்ள அரிய கனியவளங்கள் பலவகையான தொழிற்துறைகளுக்கு அத்தியாவசியமானதாக உள்ளதனால், மண்ணை பாதுகாத்து பேணுவதனைக் குறித்த விழிப்புணர்வினை எல்லோரிடத்திலும் உருவாக்க வேண்டும். அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நெறிப்படுத்தலுடன் கூடியதான விவசாய அபிவிருத்தி மற்றும் உணவு உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்டு வருகின்ற பல விவசாயம்சார் அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்கு அடிப்படையான மூலம் செழிப்பான மண்வளமே. வளமும் செழிப்புமற்ற மண்வகையினாலேயே பல நிலங்கள் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது.

விவசாய அமைச்சினால் வெளியீடு செய்யப்படுகின்ற அறுவடை காலாண்டு சஞ்சிகையானது இம்முறை மண்வளம் பற்றிய கருப்பொருளின் கீழான பல பயனுள்ள தகவல்களை தொகுத்து வழங்குவது மிகவும் பாராட்டுதற்குரியது. தொடாந்தும் பல ஆக்கபூர்வமானதும் விழிப்புணர்வினை உருவாக்குதவற்குமேதுவான விவசாயம் மற்றும் நிறைவான உற்பத்தி சார்ந்த பல விடயங்களை வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

S.M.சமன். பந்துலசேன
பிரதம செயலாளர்

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளரது வாழ்த்து செய்தி

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகின் ஏற்பாட்டில் சர்வதேச மண்தினம் இந்த ஆண்டு மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றது. அதன் ஒரு அங்கமாக விவசாய அமைச்சினால் அறுவடை எனும் இச் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி என பொதுமக் களுக்குப் பயன்தரக்கூடிய பல்வேறு தகவல்களைத் தாங்கிய "அறுவடை" சஞ்சிகை சர்வதேச மண் தினத்தில் வெளியிடப்படுவது மிகப் பொருத்த மான ஒன்றாகும்.

நாம் எமது மண்ணை நல்ல முறை யில் பாதுகாப்பதன் ஊடகவே விவசாய, கமநல சேவைகளை திறம்பட மேற்கொள்ள முடியும். இலங்கை நாடு விவசாயப் பொருளா தாரத்தில் பெரிதும் தங்கியுள்ள நாடு. அதிலும் வடக்கு மாகாணத்தின் பொருளாதாரமானது விவசாயம், கால்நடைகள் வளர்ப்பு, மீன்பிடி உள்ளிட்ட தற்சார்புப் பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது. வரலாற்று ரீதியாக வடக்கு மாகாணத்தின் வளமான மண் மற்றும் சாதகமான காலநிலைகள் என்பன பரந்த அளவிலான விவசாய நடவடிக்கைகள் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கு உகந்ததாக இருக்கின்றன. நாங்கள் தற்சார்புப் பொருளா தாரத்தில் தன்னிறைவு பெறவேண்டுமாக இருந்தால் எமது விவசாய மற்றும் கால்நடை உற்பத்திகள் சார்ந்த நடவடிக்கைகள் நவீன தொழில்நுட்பங்களுடன் இணைந்ததாக விரிவுபடுத்தப்படவேண்டும். விவசாய நவீனமயமாக்கல் குறித்த தகவல்கள் விவசாயிகளிடமும், பண்ணையாளர்களிடமும் சென்று சேர்ப்பிக்கப் படவேண்டும். அந்தப் பணியை "அறுவடை" சஞ்சிகை மேற்கொள்ளும் என நம்புகின்றேன்.

சர்வதேச மண் தினமானது மண் மற்றும் நீர் உணவு உற்பத்தி, சுற்றுச்சூழல் மற்றும் மனித நல்வாழ்வுக் கான அடித்தளத்தை வழங்கவும் அவற்றின் விலைமதிப்பற்ற தன்மையை அங்கீகரித்து, எதிர்கால சந்ததி யினருக்காக இந்த வளங்களைப் பாதுகாக்கும்பொருட்டு நாம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் வலியுறுத்துகின்றது.

அவ்வகையில் 2023 ஆம் ஆண்டில் சர்வதேச மண் தினத்தை நாம் கொண்டாடும் அதேவேளை, அதனை யொட்டியவகையில் மண்ணோடும், விவசாய நடவடிக்கைகளோடும் தொடர்புபட்டதாக இவ் "அறுவடை" சஞ்சிகை வெளிவருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

அறுவடை கஞ்சிகையினை தொடர்ச்சியாக ஒவ்வொரு காலாண்டும் வெளிக்கொணர எம்மாலான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மரியதாசன் ஜெகூ
செயலாளர்,
விவசாய அமைச்சு (வ.மா)

விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர், யாழ் மாவட்ட அரச அதிபரின் வாழ்த்து செய்தி

விவசாயப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் மாகாணமாக திகழும் வடமாகாணத்தின் விவசாயிகள், மாறி வரும் உலகின் போக்கிற்கு அமைய தமது விவசாயம் மற்றும் பண்ணை சார் நடவடிக்கைகளில் நவீன தொழில் நுட்பங்களை உள் வாங்கி சூழல் நேயம் மிக்கதும் குறைந்தளவு வளப் பயன்பாட்டில் அதி கூடிய விளைச்சலை பெறுவதற்குமான புத்துருவாக்க முனைப்பினை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் காணப்படுகிறார்கள்.

மேற்படி முயற்சிளை முன்னெடுக்கும் விவசாயிகளுக்கு வழி காட்டல்களை வழங்க வேண்டிய பொறுப்பு மிக்கவர்களாக விவசாய அமைச்சும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களும் விளங்குகின்றன.

அதனடிப்படையிலேயே வட மாகாண விவசாய அமைச்சானது தனதும் தன் கீழுள்ள திணைக்களங்களதும் செயற்பாடுகளையும் அவற்றி னால் வழங்கப்படும் சேவைகளையும் தேவை நாடுவோருக்கும் பொதுமக்களுக்கும் அறியச் செய்வதற்காக “அறுவடை” எனும் சஞ்சிகையை வெளியிட முனைந்துள்ளதும் பாராட்டுக்குரிய விடயமாகும்

இன்று நம் சமூகத்தில் பல்வேறுபட்ட இலத்திரனியல் ஊடக முறைகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் செய்தி பரிமாற்ற செயற்பாட்டில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன, விவசாய அமைச்சும் அவ்வாறான ஊடக முறைமைக்குள் ஏற்கனவே உள்வாங்கப்பட்ட போதும், அச்சு ஊடகங்களான சஞ்சிகைகள், பத்திரிகைகளின் உண்மைத் தன்மை, நிலைத்திருப்பு மற்றும் வாசகர்களின் ஆழ்மனப் பதிவு போன்ற அனுகூல அனுமானங்களின் அடிப்படையிலும் சஞ்சிகைகளே இன்று வரை சாதாரண மக்களிடம் இலகுவாக சென்றடையக் கூடியது என்பதன் அடிப்படையில் “அறுவடை” எனும் சஞ்சிகை அவ்வாறான வேலைகளை நிவைசெய்யும் என நம்புகிறேன்.

இச் சஞ்சிகை மூலம் விவசாய அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் மற்றும் நன்னீர் மீன்பிடிப் பிரிவு ஆகியவற்றின் தகவல்களைப் பெறுவது மட்டுமல்லாது அவை தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் பின்னூட்டல்களையும் வாசகர்கள் வெளிக்கொணரவேண்டும் என எதிர்பார்க்கிறேன். அவர்களது கருத்துக்களும் ஆரோக்கியமான விமர்சனங்களும் விவசாயத்துறையினது வினைத்திறனான செயற்பாட்டுக்கு வழிவகுக்கும் என திடமாக நம்புகின்றேன்.

இவ் “அறுவடை” சஞ்சிகையை வெளிக்கொணரவேண்டுமென ஆரம்ப வித்தினையிட்டவன் எனும் வகையில் இச்சஞ்சிகைக்கான வாழ்த்துக்களை வழங்கி ஊக்கப்படுத்துவதோடு தொடர்ச்சியாக இச்சஞ்சிகை வெளிவர வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

அ.சிவபாலசுந்தரன்
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.

சின்ன வெங்காய விதை உற்பத்தி

எஸ்.கீர்த்திகன்
பண்ணை முகாமையாளர்,
மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், முல்லைத்தீவு.

அறிமுகம்

சின்ன வெங்காயமானது மிக முக்கியமான குறுகிய கால பயிராகும். சின்ன வெங்காய செய்கையில் தரமான நடுகைப் பொருட்களை சரியான காலத்தில் பெற்றுக்கொள்வது மிக முக்கியமானதொரு பிரச்சனை யாகும்.

சின்னவெங்காயமானது குமிழ்களை பயன்படுத்தி அல்லது உண்மை விதைகளை பயன்படுத்தி பயிர் செய்ய முடியும். குமிழ்களை நடும் போது உற்பத்தி செலவு அதிகரிக்கின்றது. இதற்கு சரியான உண்மை விதைகளை நடுகைப் பொருளாக பயன்படுத்தலாம் .உண்மை விதையின் உற்பத்திக்கு வேதாள வெங்காய வர்க்கம் பொருத்தமானதாகும்.

வர்க்கம்

கோயம்புத்தூர் இனமான con-5,clo-1,பூவேதாளம் ARL-2, எனும் வர்க்கங்களையும் பயன்படுத்தலாம். ஆனால் TVN-6 (தெரிவு வர்க்கம்) பூப்பதோடு நோய் எதிர்ப்பு தன்மையும் கொண்டுள்ளது.

பயிர்ச்செய்கை முறை

வெங்காயம் சீராக பூப்பதற்கு வசதியாக குமிழ்களுக்கு வசந்தகால நிலைப்படுத்தல் பரிகரணம் மேற்கொள் ளப்பட வேண்டும்.
குமிழ்களை நடுவதற்கு முன்னர் பங்கசு நாசினியில் அமிழ்த்தி எடுத்தல் வேண்டும்.

நடுகை இடைவெளி

10cm*10cm or 10cm*15cm or 15cm*15cm.

நடுகைக் காலம்

காலபோகம் -November நடுப்பகுதியின் பின்னர்.
சிறுபோகம்- March-April

எதிர்பார்க்கப்படும் விதையின் அளவு

காலபோகம் - 400-500kg
சிறுபோகம்- 300kg

நோய் பீடைத்தாக்கம்

அந்தரகோஸ் நோயானது பூக்களில், தாள்களில், குமிழ்களில் உருவாகும். இதனை தவிர்ப்பதற்கு capriotop, Nativo ஆகிய பங்கசு நாசினிகளை மாறி மாறிப்பயன்படுத்தலாம்.

அறுவடை விதை பிரித்தெடுப்பு

முற்றிய பூக்கள் உண்மை விதைகளை கொண் டிருக்கும். இவற்றில் விதைகள் முற்றிய பின் தாள்கள் இன்றி கொய்து காய விட்டு தூற்றி தரமான விதை களை பிரித்தெடுக்க முடியும். இதற்கு இயந்திரங்களை யும் பயன்படுத்த முடியும்.

உண்மை விதை உற்பத்தியின் நன்மைகள்

- நிகர இலாபம் அதிகம்.
- விதையில் தன்னிறைவு அடையலாம்.
- கொண்டு செல்லல் இலகு.
- நீண்ட காலம் சேமிக்கலாம்.
- ஒப்பீட்டளவில் உண்மை விதையில் இருந்து பெறப்படும்.
- குமிழ்கள் பெரிது.
- இவை அடுத்த சுழற்சியில் உண்மை விதைகளை உற்பத்தி செய்யும்.

பாலுற்பத்தியில் தன்னிறைவு காணுவோம்

Dr.எஸ்.கிருபானந்தகுமாரன் [MVSc]
கால்நடை வைத்தியர்
செட்டிகுளம்

முன்பெல்லாம் காலையில் சைக்கிளில் பால் கொண்டுவரும் பாற்காறர்களை அடிக்கடி கண்டிருப்போம். பெரும்பாலான வீடுகளில் அவர்கள் பால் விநியோகம் செய்வார்கள். கிராமங்களில் மட்டுன்றி நகரங்களில் கூட அவர்களது பிரசன்னம் இருக்கும். எங்கள் வீடு அமைந்திருந்த பகுதியில் பால்காரரின் சைக்கிள் எழுப்பும் ஒலி இந்த கட்டுரையை எழுதும் போது எனக்கு நினைவாக ஒலிக்கிறது. இன்றைய நாட்களில் மேற்படி பால்காரர்கள் அருகி ஓரிரு கிராமங்களில் மட்டும் சிலரை காணமுடிகிறது. இன்று பெரும்பாலான மக்கள் கிராமம் நகரம் என்ற வேறுபாடு இல்லாமல் திரவப் பாலை கைவிட்டு பால் பவுடரை நுகர்கின்றனர்.

பால் சகல விதமான ஊட்டச் சத்துகளும் ஒருங்கே அமையப் பெற்ற நிறையுணவு ஆகும். வேட்டை மனிதன் மந்தை மேய்ப்பு நிலைக்கு மாறிய போது கால்நடைகளின் பாலை குடிக்க, பதப்படுத்த மற்றும் விதம்விதமான பால் பொருட்களை உருவாக்கி உண்ணவும் தொடங்கியிருந்தான். பண்டைய மனிதன் வாழ்ந்த குகைகளில் அவன் பதப்படுத்திய பால் பொருட்களின் சுவடுகளும் மந்தை மேய்ப்பு மற்றும் பால் நுகர்வு தொடர்பான ஓவியங்கள் பலவும் இன்று உலகெங்கிலும் பல இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. நாகரிகங்களின் வரலாற்றைக் கூறும் இதிகாசங்கள்,மற்றும் ஏனைய படைப்புகளில் இந்த பால் உற்பத்தி, கால்நடைகளை வளர்ப்பவர்களின் வாழ்வியல் கோலங்கள் ஆவணப்படுத் தப்பட்டுள்ளன. இந்தி

யாவின் மிகப்பெரிய இதிகாசமான மகாபாரதத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு யாதவரின் அதாவது மாடு மேய்ப்பவரின் மகன் என்பதோடு சிறு வயதில் பால் உற்பத்திப் பொருளான வெண்ணையை விரும்பி உண்பவராக கூறப் பட்டுள்ளார். இயேசு பிரானின் தந்தை கூட ஆடு மேய்ப்பவரே. எகிப்தி யர்களின் ஏராளமான ஓவியங்கள் பால் தரும் கால்நடைகளின் வளர்ப்பையும் பால் பொருட்களின் உற்பத்தியில் அவர்கள் ஈடுபடுவதையும் சித்தரிக்கி ன்றன.

முன்பெல்லாம் அநேகமானவர்களின் வீடுகளில் குறைந்தது ஒரு பால் தரும் கால்நடையாவது இருக்கும். அதன் மூலம் பாலை பெறுவது மட்டுமின்றி அயல் வீடுகளிலும் அந்த பாலை விற்பார்கள். கன்று ஈன்ற பசுவில் இருந்து சீம்பால் அல்லது கடும்பு பாலை முன்பு சீனி போட்டு குடித்திருக்கிறேன். சீம் பால் மிகவும் சுவை மிக்கது. அன்றைய நாட்களில் காய்ச்சப்படும் பாலில் மிதக்கும் தடித்த பாலாடையைக் குடிக்க சிறுவர்களிடையே கடும் போட்டி நிகழும். இன்று இந்த நிலமை கிடையாது. ஓரிரு வீடுகளில் குறைந்தளவு கால்நடைகள் இருக்கின்றன. அவற்றை வளர்கவே பெரும்பாடாக இருக்கிறது. நகர மயமாத லின் போது மேய்ச்சல் தரைகள் வீழ்ச்சி அடைந்த மையால் பெரும்பாலான நகரை அண்டியவர்கள் தமது கால்நடைகளை விற்று விட்டனர். இதனால் திரவப் பால் நுகர்வை முற்றிலும் நிறுத்தி விட்டு பைக்கற்றில் அடைத்த பால் பவுடரையே அவர்களும் நுகரவேண்டியுள்ளது. சில பால் பண்ணையாளர்களும் கூட தமது பசுக்களின் பாலை கறந்து விற்று விட்டு பால் பவுடரை குடிக்கும் வேடிக்கையும் நிகழ்கிறது.

உண்மையில் இலங்கையின் பால் நுகர்வின் பெரும் பகுதி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படும் பால் பவுடரை நம்பியே இருக்கிறது. இலங்கை யர்களின் திரவப் பால் நுகர்வு மிகவும் தாழ்நிலை யிலேயே உள்ளது. அதாவது முழு இலங்கையின் பால் உற்பத்தி, இருபத்தொரு மில்லியன் இலங்கை யரின் பால் நுகர்வு தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. சராசரி மேலை நாட்டவர்கள் வருடாந்தம் 300 லீட்டர் பாலை குடிக்கின்றனர். சராசரி இந்தியர் 125 லீட்டர் பாலை குடிகின்றார். ஆனால் இலங்கையர்கள் ஐம்பது லீற்றருக்கும் குறை வாகவே பாலை ஆண்டுதோறும் நுகர்கின்றனர். உண்மையில் நாம் ஒரு நாளைக்கு குறைந்தது 200 மில்லி லீட்டர் பாலை குடிக்கவேண்டும். அப்படி பார்த்தால் வருடாந்தம் 72 லீட்டர் பாலை நாம் நுகரவேண்டும். எனவே இதிலிருந்து இலங்கையில் பால் நுகர்வு மிகக் குறைவு என்று புரியும். அதுவும் திரவப் பாலின் நுகர்வு மிக மிக குறைவு. திரவப் பாலை விட பால் பவுடரில் ஊட்டச் சத்துகளின் அளவு குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் எப்படி இந்த பால் பவுடர் நுகர்வுக் காலச்சரம் வந்தது என்று பார்த்தால் அது மிக சுவை யான வரலாறு. 1927களில் முதன் முதலில் இந்த பால் பவுடர் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. ஆரம்பத்தில் இலவசமாக வைத்திய சாலைகளுக்கும் பிறகு பாலூட்டும் தாய்மாருக்கும் தொடர்ந்து குழந்தைகளுக்கும் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. குறித்த காலத்தின் பின் முழுக் குடும்பத் துக்கும் பால் பவுடர் என்ற ரீதியில் நிலை மாறிவிட் டது. இதற்கு உதவியாக தமிழ் ஆங்கில சிங்கள பத்திரிகைகளில் அன்றைய தினத்துக்கு ஏற்ப மிக சிறப்பாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. இதேபோன்ற ஒரு யுக்தியை கோதுமை மாவை இலங்கையில் அறிமுகப்படுத்தும் போதும் பாவிக்கப்படிருந்தது. அதன்போது பாடசாலை சிறுவர்களுக்கு இலவச பிஸ்கட்டுகள் வழங்கப் பட்டிருந்தன. பால் பவுடரின் அறிமுகத்துடன் திரவப் பால் நுகர்வு படிப்படியாக குறைவடைந்து இன்று மிக பிரமாண்டமான அள வில் பால் பவுடரின் நுகர்வு மாறியிருக்கிறது. இன்று நியுசிலாந்து ,அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க நாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் இலங்கை யின் பால் பவுடர் சந்தையை செய்கின்றன.

எமது அண்டை நாடான இந்தியா இன்று பாலுற்பத் தியில் தன்னிறைவு கண்டிருப்பதை எம்மால் வியப்புடன் தான் பார்க்க முடிகிறது. 120கோடிக்கு மேல் சனத்தொகை கொண்ட இந்தியா இந்த நிலை எய்தி இருப்பது சாதனைதான். உலகின் மிக சிறந்த பால் உற்பத்தியாளர் இந்தியாதான். இந்-தியர்கள் பொதுவாக திரவ பாலையே நுகர்கின் றனர். அமுல், ஆரோக்யா, ஆவின், நந்தினி என ஏராளமான கூட்டுறவு பால் சேகரிப்பு கட்டமைப்புகள் இந்தியாவை இந்த தன்னிறைவு நிலைக்கு மாற்றி

இருக்கின்றன. இவற்றின் தீவிர செயற்பாட்டால் வெளிநாட்டு பால் நிறுவனங்கள் இந்தியாவுக்குள் அதிகம் நுழைய முடியாமல் போய்விட்டது. மேலும் இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் இதற்கு பக்க பலமாக இருந்தன. சிறப்பான பால் கொள்கைகள் தீட்டப்பட்டன. இலங்கையில் திறந்த பொருளாதரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின் ஏராளமான தன்னிறைவு விடயங்கள் பல்தேசிய நிறுவனங் களின் பிடிக்குள் சென்றுவிட்டன. அதில் பால் உற்பத் தியும் ஒன்று.

அண்மைக் காலத்தில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்க மற்றும் திரவப் பாலை நுகர ஏராளமான முயற்சிகள் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது. நகரங்கள் முதல் கிராமங்கள் வரை மக்கள் நல்லின மாடுகளை வளர்க்கத் தொடங்கியுள்ளதையும் தமது பாலை சில அரச மற்றும் தனியார் பால் கொள்முதல் நிறுவனங்களுக்கு கொடுப்பதையும் அவதானிக்க முடிகிறது. அரசாங்கமும் கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் ஊடாக ஏராளமான செயற்திட் டங்களை நடமுறைப்படுத்துகிறது. முழு மானியம் மற் றும் அரை மானியம் என்ற அடிப்படையில் நல்லினக் கால்நடைகள், கால்நடைகளின் கொட்டகைகள், புல் வளர்ப்பு என அவற்றின்செயற்திட்டங்கள் அமைகின் றன. இதனை விட செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் அதிக பால் உற்பத்தி கொண்ட கால்நடைச் சந்ததிகளை உருவாக்கும் செயற்பாடுகளும் மேற்கொள் ளப்படுகின்றன. உண்மையில் கணிசமான அளவு கால்நடைகள் அதி உற்பத்தி திறன் கொண்ட கால்நடைகளாக மாற்றப்பட்டுள்ளன. மக்களும் வெளியக முறை [Extensive management] கால்நடை வளர்ப்பினை குறைத்து அரை உள்ளக மற்றும் உள்ளக முறை கால்நடை வளர்ப்புக்கு [Semi Intensive / Intensive management] மாறி வருகின்ற னர். நல்லின புற்களை வளர்ப்பதோடு கால்நடைத் சிறந்த தீவன மேலாண்மை மற்றும் கனியுப்பு பயன்பாட்டையும் ஓரளவுக்கு கையாளத்தொடங்கி யுள்ளனர். அண்மைக் காலத்தில் கால்நடை வைத்தியர் களின் சேவை பெரும்பாலான இடங்களில் கிடைக் கின்ற சூழ்நிலையும் ஓரளவுக்கு உருவாகியுள்ளது. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் திரவப்பால் நுகர்தல் தொடர்பான விழிப்புணர்வு முறைப்படுத்தப்படுகின்றதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனினும் எமது பால் உற்பத்தி எமது பால் தேவை யின் அரை வாசி அளவைக் கூட இன்னும் நாம் அடையவில்லை என்பது கவனிக்க வேண்டிய விடயம். வருடம் தோறும் பல மில்லியன் பெறுமதி யான பால் பவுடர் மற்றும் இதர பால் பொருட்களை யும் இறக்குமதி செய்கிற சூழ்நிலை காணப்படுகிறது. உண்மையில் மேற்படி பால் பொருட்களுக்கு செலவிடும் பணத்தின் ஒரு பகுதியை குறித்த காலத் துக்கு எமது உள்ளூர் கால்நடை வளர்ப்பாளர்களை முன்னேற்ற பயன்படுத்தினாலே அவர்களின்



கால்நடைகள் மேம்படுவதோடு பால் உற்பத்தியும் அதிகரிக்கும். அதன்பிறகு எமது நாட்டின் பால் தேவை நிறைவு செய்யப்படுவதோடு மேலதிக பால் உற்பத்தியும் ஏற்பட்டு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையும் தோன்றும். மிதமிஞ்சிய பாலை கொண்டு யோகட், தயிர், பால் பவுடர், பனீர், சுவையூட்டிய பால், ஐஸ் கிரீம். சொக்லேட் என பால் உற்பத்திப் பொருட்களை தயாரித்து மேலதிக வருமானத்தையும் பெறமுடியும். வெளிநாடுகள் அதைத்தான் செய்கின்றன. எமது நாட்டு சந்தையை ஆக்கிரமித்திருக்கும் வெளிநாடுகளின் பால் பொருட் கள் எமது பொருளாதரத்தை அவர்களது நாடுகளுக்கு கொண்டு செல்கின்றன.

பால் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் செய்யப்படு கின்ற போதிலும் அதிலும் பல தடைகள் இருகின்றன. குறிப்பாக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது பாலுக்கு சரியான விலையை பெறுவதில்லை.பல இடங்களில் இடைதரகர்கள் அவர்களின் பால் பெறுமதியில் கணிச மான அளவை சுருட்டிக் கொள்கின்றனர்.நான் பணி புரியும் பகுதியில் அன்றைய நாளில் அறுபது ரூபாய்க்கு பால் கொள்வனவு செய்யப்பட்ட போது அவர்களுக்கு இடைதரகர் நாற்பது ரூபாயையே கொடுத்திருந்தார். அதாவது மூன்றில் ஒரு பங்கு அவருக்கே போகிறது. யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்த அந்தப் பகுதியின் வீதிகள் மிக மோசமாக இருப்பதை மேற்படி இடைதரகர் காரணமாக கூறினார்.அதனை விட

பாலைக் கொள்முதல் செய்யும் மற்றும் களஞ்சியப் படுத்தும் வசதிகள் இன்னும் பல பகுதிகளில் மேம்படுத்தப் படவில்லை என்பது மிகப் பெரிய குறை. ஒழுங்கற்ற வீதிகள் மற்றும் அதிக தூரம் காரணமாக பால் பழுதடை யும் நிலையும் ஏற்படுகிறது.

மக்களின் அன்றாட தேவைகளுக்கு வீதி உட்கட்டமைப்பு எவ்வளவு முக்கியமோ கால்நடை உற்பத்தி பொருட்கள் மற்றும் பால்விற்பனை விநியோகத்துக்கும் அவை மிக முக்கியம். அவை சரிபடுத்தப்படும் பட்சத்தில் மிக உச்ச விளைவை பால் உற்பத்தியாளர்கள் பெறமுடியும்.மேலும் பாலை கொள்வனவு செய்யும் மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையங்களை அதிகரிக்கும் பட்சத்தில் பால் பண்ணை யாளர்கள் உச்சபட்ச வரு மானத்தை பெற்றுக் கொள்வார்கள். அவர்களுக்கான தகுந்த பயிற்சிகள் அவர்களை மேலும் வினைத்திற னாக மாற்ற வழிச மைக்கும்.எங்கள் நாட்டில் அதிக மாக உள்ள நாட்டு மாடுகள் மிகக் குறைந்தளவு பாலையே உற்பத்தி செய்கின்றன.இறைச்சிக்காகவே இவை வளர்க்க படுகின்றன. சிலவேளைகளில் இறைச்சிக்கு மாடு களை கொல்வது தடைபட்டு வெளிநாடுகளில் இருந்து இறைச்சி இறக்குமதி செய்யப்படும் நிலை எதிர்காலத் தில் ஏற்பட்டால் இந்த மாதிரியான பண்ணையாளர் கள் கடுமையாக பாதிக்கபடுவார்கள்.

எனவே மெது மெதுவாக எங்கள் நாட்டு மாடுகளில் குறைந்தபட்சம் ஒரு தொகையையாவது பால் உற் பத்தித்தரக் கூடியதாக மாற்றுவதுதான் பொருத்த மானது. இல்லாதுபோனால் மாடு வளர்ப்பு மொத்த மாக அழிவடையும் சாத்தியம் உள்ளது. மேய்ச்சல் தரை இல்லை என்பதும் ஒரு பாரிய பிரச்சனைதான். அதிகரித்து வரும் சனத்தொகை பெருக்கம் மற்றும் விவசாய நிலங்கள் மற்றும் நீர்பாசன திட்டங்கள் காரணமாக இயற்கையான மேய்ச்சல் நிலங்கள் குறைவடைந்துள்ளன. எனவே பல இடங்களில் அதிகளவான மாடுகளை வளர்ப்பது எதிர்காலத்தில் சாத்தியமற்றதாக மாறப்போகின்றது.வெள்ளம் வருமுன்தான் அணை கட்ட வேண்டும்.

எனவே மேற்படி மாடு வளர்ப்பு முறைகளை மாற்றம் செய்ய வேண்டிய அவசரதேவை உள்ளது.புல்லு வளர்ப்பு சைலேஜ் எனும் ஊறுகாய் புல் செய்தல் போன்ற முறைகளை மேற்கொள்வதன் மூலம் மாத்திரமே மாடுகளின் உணவு தேவையை பூர்த்தி செய்யலாம் என்பதுடன் பாலுற்பத்தியையும் தொடர்ச்சியாக பெறமுடியும்.அண்மைய காலங்களில் அரசு மற்றும் தனியார் மூலம் புல் மற்றும் சோள உற்பத்திக்கு கணிசமான அளவு ஒதுக்கீடுகள் வழங்கப் பட்டுள்ளதால் பண்ணையாளர்கள் அவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

திரவப் பால் நுகர்வு சம்பந்தமான மக்களின் தற்போதைய மனநிலையை சரியான தெளிவுபடுத்தல் கள் மூலம் மாற்றுவதோடு மட்டுமின்றி தொடர்ச்சியாக திரவப் பாலினை கிடைக்கக் கூடிய வகையிலான திட்டங்கள் தீட்டப்பட்டால் தேவையற்ற இறக்குமதிச் செலவை குறைக்க முடியும்.

திருமதி.செ.செந்தூர்க்குமரன்
விவசாயப்போதனாசிரியர்

வீட்டுத்தோட்டங்களில் மிளகு பயிர்ச்செய்கை

இலங்கை மக்கள் அனைவராலும் வாசனைத் திர வியமாகவும், மருத்துவப் பொருளாகவும் பயன் படுத்தப்பட்டு வரும் மிளகுப்பயிரானது இற்றைக்கு 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இப்பயிரின் தோற்றுவாயாக இந்தியா விளங்குகின்றது. கிழக்கு ஆசியா, வடக்கு அமெரிக்க நாடுகளில் ஏற்றுமதிப் பயிராகவும் இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிராக வும் காணப்படுகிறது. இலங்கையில் மிளகு பயிரானது மாத்தளை, கண்டி, கேகாலை, பதுளை, இரத்தின புரி, மொனராகலை, குருநாகல் ஆகிய மாவட்டங் களில் 42,989ha நிலப்பரப்பில் செய்கை மேற் கொள்ளப்படுகின்றது.

அதேவேளை யாழ் குடாநாட்டில் வீட்டுத்தேவை களுக்காக சில வீட்டுத்தோட்டங்களில் இப்பயிர் கலப்புப் பயிராக நாட்டப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான வீட்டுத்தோட்டங்களில் இப்பயிர் நாட்டப்படுவதில்லை. இதற்கு மிளகு நாற்றுக்களை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம், பராமரிப்பு சம்பந்தமான தொழில்நுட்ப அறிவின்மை போன்றன காரணங்களாகும்.

இலங்கையை பொறுத்தவரையில் பொருளாதார ரீதியாக விலை உயர்ந்த பொருளாக மிளகு காணப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் மாதமொன் றிற்கு சராசரியாக 100g எனும் அடிப்படையில் வருடத்திற்கு 1200g - 1500g மிளகு நுகரப்படுகின் றது. இதைக் கருத்ததிற்கொண்டு மிளகுத்தேவையை பூர்த்தி செய்யும் நோக்கமாக மிளகினை வீட்டுத் தோட்டங்களில் நடுகை செய்து பயனைப்பெறுவதற் குரிய சிறந்த வழிமுறைகளை தரும் நோக்குடன் இச்செய்தி அமைகிறது.

பெப்பரேசியே (Piperaceae) குடும்பத்தைச் சேர்ந்த பல்லாண்டு ஏறித்தாவரமான (Climbers) மிளகு பெப்பர் நைகிறம் (Piper nigrum) என்ற தாவரவியல் பெயரினால் அழைக்கப்படுகின்றது. இது நிழலை விரும்பும் பயிராக இருப்பதால் கலப்புப் பயிராக நடுகை செய்யலாம். இதற்குரிய பொருத்த மான காலநிலை யாக வெப்பநிலை 240 C ஆகவும், வளிமண்டல ஈரப்பதன் 80% ஆகவும் இருத்தல் அவசியமாகும். எனினும் நல்ல நிழலினை வழங்கக் கூடிய பலா, மா, போன்ற மரங்களில் மிளகுப்பயிரினை படரவிடும் போது இப்பயிருக்கு தேவைப்படும் சிறப்பு வெப்பநிலை யையும் ஈரப்பதனையும் வழங்கக்கூடி யதாகவிருக்கும்.

இலங்கையில் பனியூர்1, குச்சின், MB12, GK49, உள்ளூர் இனங்களும் செய்கை பண்ணப்படுகின்றன. இருந்தபோதும் உள்ளூர் இனங்களே எமது கால நிலைக்கு மிகவும் பொருத்தமானதாக காணப்படு கின்றது. ஏற்றுமதி விவசாயத்திணைக்களம் இன்கி ரிரால, கும்புரரால, பூட்டாவரால எனும் மூன்று புதிய இனங்களை அண்மையில் அறிமுகம் செய்துள்ளது. இப் பயிருக்கான நடுகைப்பொருள் வெட்டுத்துண் டங்கள் ஆகும்.

நடுகைப்பொருளான வெட்டுத்துண்டம் பெறுதலுக் கான தாய்த்தாவர தெரிவு வெட்டுத்துண்டங்களை பெறு வதற்கு தெரிவு செய்யும் தாவரம் கீழ்வரும் இயல்புகளை கொண்டிருக்க வேண்டும்.

☛ ஆரோக்கியமான, வீரியமுள்ள, சிறந்த பற்றிப்பி டிக்கும் ஆற்றல் உள்ளவை.
☛ தாராளமான பக்கக்கிளைகளை உருவாக்குவதுடன் கணு இடைவெளி சிறிதாகவும் இருத்தல்.
☛ 5-7 கணுக்கள் 25செ.மீ நீளமுள்ள கிளையில் காணப்படல் வேண்டும்.
☛ எல்லா அல்லது பெரும்பாலான கணுக்களில் பழக்குலைகள் தோன்றுதல்.
☛ 15செ.மீ இலும் கூடிய நீண்ட பழக்குலைகளாக இருத்தல்.
☛ உருண்டையான பழங்களாக இருத்தல்.
☛ நோய் பீடைதாக்கமற்றதாக இருத்தல்.
☛ வருடத்திற்கு வருடம் சீரான உயர் விளைச்சலை கொண்டிருக்க வேண்டும்.

☛ ஒழுங்கற்ற முறையில் காய்க்கும் கொடிகளை தெரிவு செய்யக்கூடாது.

தண்டின் நுனிப்பகுதி, பக்க கிளைகளிலிருந்து பெறப்படும் துண்டங்கள் மற்றும் தண்டின் அடிப்பக்கத்திலுள்ள ஓடிகள் நடுகைப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

இருப்பினும் தண்டின் நுனிப்பகுதியும் தண்டின் அடிப்பக்கத்திலுள்ள ஓடிகளுமே நடுகைக்கு பொருத்தமானது.

வெட்டுத்துண்டங்களை பெறும்போது கருத்திற் கொள்ள வேண்டியவை

☛ பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின்பு தாய்த்தாவரத்திலிருந்து வெட்டுத்துண்டங்களை பெறவேண்டும்.

☛ ஒவ்வொரு துண்டமும் 2-3 கணுக்கள் கொண்டதாகவும் ஒரு இலை உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

நடுகை செய்தல்

☛ நிழலான இடத்தை தெரிவு செய்தல்

☛ நடுகை இடைவெளி – 2.5x2.5m அல்லது 7 ½' X 7 ½'

☛ நடுகைக்குழி 1 ½' X 1 ½' X 1 ½' அளவில் அமைக்கப்பட வேண்டும்.

☛ கூட்டெரு, மேல்மண் என்பவற்றை 1:1 என்ற விகிதத்தில் கலந்து தயாரிக்கப்பட்ட ஊடகத்தினால் நடுகைக் குழியை நிரப்பி நாற்றினை நடுகை செய்தல்

☛ நடுகை செய்தவுடன் நிழல் வழங்கப்படல் முக்கியமானது.

☛ மண் ஈரப்பதனை பேணுவதற்காக தென்னம் பொச்சு, உமி, காய்ந்த புற்கள் போன்றவற்றை நடப்பட்ட மிளகுத்தாவரத்தின் அடிப்பகுதியை சுற்றி பத்திரக் கலவையாக இடல்.

☛ நாட்டப்பட்ட தாவரத்திற்கு சீமைக்கிழுவை, அகத்தி, முள்முருக்கை போன்றவற்றினால் ஆதாரம் வழங்கல்.

☛ வீட்டுத்தோட்டங்களில் கமுகு, பலா, மா போன்ற மரங்களில் மிளகுப் பயிரினை ஏறிகளாக வளரவிடலாம்

பசளைப்பிரயோகம்

சேதனப்பசளை இடுவதாயின் இரசாயன உரம் இடுவதன் அளவை அரைவாசியாக குறைத்துக் கொள்ள முடியும்.

சேதனப்பசளை வகை	அளவு (கிலோகிராம் / வருடம்)
சீமைக்கிழுவை இலை	10 -15
உலர்ந்த மாட்டு சாணம்	16
உலர்ந்த கோழி உரம்	12
மண்புழு உரம்	15

வருடாந்த பசளைக் காலம்	யூரியா(g)	ரி.எஸ்.பி(g)	எம்.ஓ.பி(g)
1ம் வருடம்	66	50	66
2ம் வருடம்	133	100	133
3ம் வருடம் மற்றும் அதன் பின்னர்	200	150	200

கத்தரித்தல்

☛ மிளகுக்கொடியில் நேர்த்திருப்பக்கிளை, பக்கத்திருப்பக்கிளை என இரண்டு வகையான கிளைகள் தோன்றும்.

☛ நேர்த்திருப்பக்கிளையில் 3-4 கிளைகளை மட்டும் அனுமதித்து ஏனைய கிளைகளை அகற்றல் வேண்டும்.

☛ பக்கத்திருப்பக் கிளைகளை கத்தரித்தல் வேண்டும்.

☛ அவற்றுடன் நீர்வாதுக்கள், நோய்ப்பீடைக்குட்பட்ட வாதுக்கள், உற்பத்தி குறைவான வாதுக்கள் என்பவற்றை கத்தரித்து காற்றோட்டம் உள்ளவாறு பேணுதல் வேண்டும்.

மகரந்த சேர்க்கை

☛ மிளகுக்கொடியின் முனைஅரும்புகளில் மஞ்சள் கலந்தவெள்ளை நிறமான பூக்கள் தோன்றும்.

☛ மகரந்தச் சேர்க்கை நீரின் மூலமே நடைபெறுகின்றது.

☛ இதனால் இக்காலங்களில் மழைவீழ்ச்சி முக்கியமானதொன்றாகும்.

☛ இவற்றிற்கு மாறான காலங்களில் நீரை விசிறுவதன் மூலம் மகரந்தச் சேர்க்கையை துாண்ட முடியும்.

☛ வருடத்தின் இரு போகங்களிலும் பூக்கள் தோன்றும்.

☛ 6-7 மாதங்களில் முதிர்ந்த காய்களைப் பெறமுடியும்.

அறுவடை

முறையாக பராமரிப்பின் கீழ் வளர்ந்த கொடிகளிலிருந்து 21/2 வருடமளவில் அறுவடை மேற்கொள்ள முடியும்.

கால்நடை வைத்திய நிலையங்களினால் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும் - சேவைகள் -

எமது வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 05 மாவட்டங்களிலும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஒன்று எனும் விகிதத்தில் 34 கால்நடை வைத்திய நிலையங்கள் இயங்கிவருகின்றன. இக் கால்நடை வைத்திய நிலையங்களினால் பண்ணையாளர்களுக்கு வழங்கப் படும் சேவைகளை பிரதானமாக 05 வகைப்படுத்தலாம்.

1. கால்நடை சுகாதார சேவைகள் (Animal Health)
2. கால்நடை இனவிருத்தி சேவைகள் (Animal Breeding)
3. விரிவாக்க சேவைகள் (Extension)
4. கால்நடைச் சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் விவகாரங்கள் (Animal Act & Veterinary Regulatory affairs)
5. பொதுச்சுகாதார சேவைகள் (Public Health)

கால்நடை சுகாதார சேவைகள்

கால்நடை சுகாதார சேவைகளின் கீழ் காால்நடைகளுக்கு வழங்கப் படும் சிகிச்சைகள் (Treatment) அவற்றிற்கு நோய்கள் வராமல் தடுப்பதற்குரிய தடுப்பு மருந்துகள் / தடுப்பூசிகள் வழங்கல் (Vaccination), காால்நடைகளுக்கு சுகாதார சான்றிதழ் வழங்கல், காால்நடைகள் இறந்தால் அவற்றுக்குரிய காரணங்களைக் கண்டறிவதற்காக பிரேத பரிசோதனையை மேற்கொள்ளல் (Post Mortem), ஆய்வுக்கான மாதிரிகள் சேகரித்தல் போன்றன உள்ளடங்குகின்றன.

பெரும்பாலான தடுப்பு மருந்துகள் இலவசமாகவே பண்ணை யாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. சிகிச்சைக்குரிய மருந்துகள் பெரும்பாலும் பண்ணையாளர்களினால் பெற்றுத்தரப்படவேண்டி யுள்ளது. சுகாதாரச்சான்றி தழ்கள் வழங்கல், பிரேத பரிசோதனை மேற்கொள்ளல் போன்றவற்றிற்கு திணைக்களச் சுற்று நிருபத்-திற்கு அமைவாக கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

காால்நடை இனவிருத்தி சேவைகள்

காால்நடை இனவிருத்தி சேவைகளின் கீழ் செயற்கைமுறைசினைப்படுத்தல் (Artificial Insemination) , சினைப்பரி சோதனை மேற்கொள்ளல் (Pregnancy Diagnosis), இதன் முலம் நல்லின சந்ததிகளை உற்பத்திசெய்தல், நல்லினக் கன்றுகளை கன்னிப்பசு வளர்ப்புத் திட்டத்தின் (Heifer Calf Rearing Programme) கீழ் பதிவு செய்து அவற்றுக்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் பண்ணையாளர்களை ஊக்குவித் தல், இனப்பெருக்கத்திற்கு பாவிக்க முடியாத ஆண் விலங்குகளை நலம் தட்டல் (Castration), சினைப்படாத பெண் விலங்குகளுக்கு சிகிச்சையளித்தல் (Infertility Treatment),பெண்விலங்கு களுக்கான வேட்கையை ஒருமுகப்படுத் தல் (Synchronization) போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

விரிவாக்க சேவைகள்

காால்நடை விரிவாக்க சேவைகளின் கீழ் ஒருநாள் வயதுடைய கொல்லைப் புற கோழிக்குஞ்சுகளை பிராந்திய காால்நடைப் பண்ணைகளிலிருந்து பண்ணையாளர்களுக்கு முற்பதிவு செய்வதன் அடிப்படையில் பெற்றுக் கொடுத்தல், ஒருநாள் வயதுடைய கொல்லைப்புற கோழிக்குஞ்சு ஒன்றின் விலை ரூபா 75.00 ஆகும்.

பண்ணையாளர்களுக்கு தேவைப்படும் நல்லின கால்நடைகளைத் தெரிவுசெய்து வழங்கல், நடமாடும் கால்நடை வைத்திய சேவைகளை நடாத்துதல். (Mobile Veterinary Clinic) பண்ணையாளர்களுக் கான பயிற்சி வகுப்புக்களை (Farmer Training Programme) நடாத்துதல், விழிப்புணர்வு நிகழ்வு-களை நடாத்துதல் (Awareness Programme), கால் நடைகளுக்கு தேவையான நல்லின புற்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் புல் துண்டங்கள், விதைகளை வழங்கி பண்ணையாளர்களை ஊக்குவித்தல், கால்நடை வளர்ப்பு தொடர்பான திணைக்கள பிரசுரங்களை பண்ணையாளர்களு க்கு வழங்குதல், அரச, அரசசார்பற்ற நிறுவனங்க ளினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு தேவை யான கால்நடைகளைப் பெற்றுக்கொடுத்தல், பண்ணை யாளர்களுக்கு வங்கிகளில் கால்நடை வளர்ப்பு தொடர்பான கடனுதவிகளை பெற்றுக் கொள்வதற்கான சிபாரிசினை வழங்கல், கால் நடைகளை காப்புறுதி செய்வதற்கு சிபார்சு வழங்கல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

கால்நடைச் சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் விவகாரங்கள்

இதன் கீழ் கால் நடைப் பண்ணைகளை பதிவு செய்தல் (Farm Registration) , மாடுகளை அடையாளமிடல் (Ear Tagging), இனவிருத்திப் பண்ணை, குஞ்சு பொரிப்பகம், கால்நடைச் சிகிச்சை நிலையம், கால் நடைதீவன உற்பத்திச்சாலை, கால் நடை உணவு விற்பனை நிலையம், மற்றும் மருந்து விற்பனை நிலையங்கள் பதிவுசெய்தல், கால்நடை களை கொண்டு செல்வதற்கான சுகாதாரச் சான்றிதழ், வாகன தகுதிசான்றிதழ் என்பனவற்றை வழங்கல், திணைக்கள சேவைகள் தொடர்பான முறைப்பாடு களை ஏற்றுக் கொள்ளலும் தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

பொதுச்சுகாதார சேவைகள்

இதன் கீழ் ஆய்வுகூட பரிசோதனைக்காக பால், இறைச்சி, முட்டை மாதிரிகள் சேகரித்தலும், அவற்றை இனங்காண வசதிப்படுத்தலும் போன்ற செயற்பாடு கள் உள்ளடங்குகின்றன.

மேற்கூறப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் பால், முட்டை, இறைச்சி உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் விலங்கு புரதத்தை வடமாகாணத்தில் தன்னிறைவு அடையச்செய்தலே எமது திணைக்களத் தின் பிரதானநோக்கமாக உள்ளது. அத்துடன் பண்ணையாளர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதுமாகும்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டுப் பயிற்சி நெறியாக கணனிப் பயிற்சிநெறி நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

நன்னீர் மீன் இனங்களும் அவற்றின் ஊட்டச் சத்துக்களும் - ஒரு பார்வை -

நன்னீர் மீன் இனங்கள் உலகம் முழுவதும் பலதரப் பட்ட கால நிலைகளில் பலதரப்பட்ட இனங்களிலும் காணப்படுகின்றது. உவர் நீர் அற்ற ஆறுகள் குளங் கள் குட்டைகள் மற்றும் சிறிய நீர்தேக்கங்களில் இவை அதிகம் வளர்ச்சியடையும். இவ்வகை மீன் கள் இன்று அதிக கேள்வியுடையவையாகவும் ஊட் டச்சத்துக்கள் நிரம்பியதாகவும் காணப்படுகின்றன. இம் மீன் இனங்களினை ஒவ்வொன்றாக நோக்கலாம்.

நன்னீர் மீன் இனங்களின் வாழ்க்கை காலம்

- முட்டையில் இருந்து வெளிவந்த குஞ்சுகள் 15 நாட்களில் இருந்து 21 நாட்கள் வரை கசல என அழைக் கப்படும்.
- 30 – 39 நாட்கள் வளர்ச்சியடைந்த குஞ்சுகள் fingerlings என்று அழைக்கப்படும்.
- Tilapia fingerlings 4-6 மாதத்தில் அறுவடை செய்யப்படும். இவை 350 -600 g நிறை காட்டும். சராசரி 220 - 300 ரூபா வரை விற்க்கப்படும்.
- றோகு கட்லா என்பவை 9 மாத வளர்ச்சியின் பின்பே அறுவடை செய்யகூடியவை. 3-4kg வளர்ச்சி உடையவை.

1. திலாப்பியா/Tilapia

- விஞ்ஞானப் பெயர் : Monosen
- உடல் அமைப்பு : நடுத்தர தலையுடன் கூடிய அகலமான மீன். 6 மாதத்தில் 1kg தொடக்கம் 11/2kg வரை வளர்ச்சி காட்டும்.
- உணவு : விலங்கின மிதவை நுண்ணுயிரிகள்
- வாழுமிடம் : நீரின் நடுப்பரப்பு
- இனமுதிர்ச்சிக்காலம் : 1 வருடங்கள்

2.றோகு/Rogu

- விஞ்ஞானப் பெயர் : labeo Rohitu
- உடல் அமைப்பு : சீரான உடல் அமைப்புடன சுருக்கங்கள் கொண்ட வாயைப்பெற்றிருக்கும்.
- உணவு உட்கொள்ளும் முறை : குளத்தின் நடுமட்டத்தில் வளரும் பாசிகள், நீர்த்தாவரங்கள், செயற்கைஉணவுகளைஉண்ணும்
- இனப்பெருக்கமுறை : தூண்டு முறை இனப்பெருக்கம்.
- இனமுதிர்ச்சிக்காலம் : இரண்டு ஆண்டுகள் வளர்ச்சி 1 ஆண்டுக்கு 750Kg வளரும்
- வாழுமிடம் : குளத்தின் நடுப்பகுதி

3. புல்கெண்டை /Grass carp

- விஞ்ஞானப் பெயர் : Cenophary ngoden idellus
- உடல் அமைப்பு : நீண்ட உருண்ட உடல் அமைப்பு
- உணவு உட்கொள்ளும் முறை : நீர்த்தாவரங்கள் மற்றும் புற்கள்
- இனப்பெருக்கம் : தூண்டு முறை இனப்பெருக்கம்.
- இனமுதிர்ச்சிக்காலம் : இரண்டு ஆண்டுகள்
- வளர்ச்சி : ஓராண்டுக்கு 1.5 kg வளரும்
- வாழுமிடம் : குளத்தின் நடு மற்றும் கரையோரப்பகுதிகள்

4.கட்லா /Catla

- உடல் அமைப்பு : பெரிய தலையுடன் கூடிய அகலமான உடல்
- உணவு : நீரின் மேற்பரப்பில் உள்ள விலங்கின நுண்ணுயிர்களை உண்ணும்.
- இனப்பெருக்கமுறை : தூண்டு முறை இனப்பெருக்கம்.
- வாழுமிடம் : நீரின் மேற்பரப்பு
- இனமுதிர்ச்சிக்காலம் : இரண்டு ஆண்டுகள்.

5.சாதாக் கெண்டை /Common Carp

- விஞ்ஞானப் பெயர் : Cyprinus CArpio
- உடல் அமைப்பு : பெரிய வயிற்றுடன் கூடிய குட்டையான உடல்
- உணவு உட்கொள்ளும் முறை : அனைத்துமுண்ணி
- இனப்பெருக்க முறை : இயற்கையாக குளத்தில் இனமுதிர்ச்சி யடையும். துண்டு முறையில் இனப் பெருக்கம் செய்யப்படும்.
- இனமுதிர்ச்சிக்காலம் : 6 மாதங்கள்
- வளர்ச்சி : ஒரு ஆண்டுக்கு 1 kg
- வாழுமிடம் : குளத்தின் அடிப்பகுதி

ஊட்டச் சத்து மதிப்பீடுகள்

- உயர் புரதச்செறிவு காணப்படுகிறது.
- இவற்றுடன் மீன் எண்ணை ஒமேகா-3 கொழுப்பமிலம் என்பன காணப்படுகின்றன.
- மீன்களின் சத்து என்பது மீன்களின் வகைகளைப் பொறுத்ததாக அமையும்.
- ஒரு நன்னீர் மீனில் சோடியம் 48.2 மி.கி முதல் 124.8 மி.கி என்ற அளவில் உள்ளது.
- கல்சியம் 4.4 மி.கி முதல் 233.0 மி.கி என்ற அளவில் உள்ளது.
- பொட்டாசியம் 228.4 மி.கி முதல் 500.8 மி.கி என்ற அளவில் அதிகமாக உள்ளது.

நன்னீர் மீன்களினை உண்பதால் கிடைக்கும் நன்மைகள்

- நன்னீர் மற்றும் கடல் மீன்களுடன் ஒப்பிடும் போது நன்னீர் மீன்கள் புரதஅளவு மற்றும் ஒமேகா-3 கொழுப்பமிலம் உயர் அளவில் இருப்பதால் வளரும் சிறுவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினருக்கு மிகுந்த போசாக்கினை வழங்குகின்றது.
- நன்னீர் மீன்களில் கொழுப்பமிலங்கள் அதிகமாக கிடைக்கின்றன.
- நன்னீர் மீன்கள் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறு குழந்தைகளுக்கு மிகவும் சிறந்தது.
- இதயம் தொடர்பான பிரச்சினைகளினை சீர்செய்ய நன்னீர் மீன்கள் மிகவும் சிறந்தவை.
- கடல் மீனுடன் ஒப்பிடும் போது இரசாயனக் கழிவு சேர்மானங்கள் அற்றது.

K.Chinthujan(DFSC)
Aquaculture Development officer
Mullaitivu

கற்றாழையில் பெறுமதி சேர் உணவு தயாரித்தல் !

இயற்கை வழங்கிய கொடைகளில் ஒன்றான கற்றாழை அதிகளவு மருத்துவ குணங்களைக் கொண்ட வறள்வலய தாவர மாகும். இது கன்னி, குமரி என்றும் அழைக்கப்படுகின்றது. உடலின் அனைத்து உறுப்புக்களுக்கும் உகந்த மூலிகைக் குணங்கள் இதில் அடங்கியுள்ளது.

இலையிலிருந்து பெறப்படும் ஜெல் ஆனது சூரிய ஒளியின் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுக்களில் இருந்து சருமத்தைப் பாதுகாக்கின்றது. மேலும் சருமத்தின் ஈரத்தன்மையையும், நிறத் தினையும் மேம்படுத்துகின்றது.

மருத்துவப் பயன்கள்

- சருமத்தைப் பாதுகாக்கும்
- உடலின் நச்சுத்தன்மையை அகற்றும்
- ஈரல், குடலின் செயற்பாட்டை சீராக்கும்.
- உடற்சூட்டை தணிக்கும்.
- உடல் பருமனை குறைக்கின்றது
- மேலதிக கலோரி, கொழுப்பை குறைக்கின்றது.
- குடல்புண் நோய்களிற்கு சிறந்த நிவாரணி.
- இருமல், சளி போன்றவற்றிற்கும் மருந்தாகின்றது.
- தீக்காயம், அரிப்பு, வெட்டுக்காயங்களுக்கும் சிறந்த நிவாரணி.

பொருளாதாரப் பயன்கள்

சரும லோசன்கள், சவரம் செய்வதற்கான கிரீம், சாம்பூ ஆகிய உற்பத்திகளுக்கு பயன்படுகின்றது.

கற்றாழையில் தயாரிக்கக்கூடிய உணவுகள்

- கற்றாழைப் பானம்
- கற்றாழைப் பச்சடி
- கற்றாழை இனிப்பு
- கற்றாழை லட்டு

கற்றாழை உணவாக உண்ணும் போது கவனிக்கவேண்டிய விடயங்கள்.

- நான்கு ஆண்டுகள் வளர்ந்த கற்றாழைச் செடியின் முற்றிய இலைகளிலேயே அனைத்துச் சத்துக்களும் காணப்படுகின்றன.
- இச் செடியின் வெளிப்புற முதிர்ச்சியடைந்த மடல்களை நறுக்கி அதிலுள்ள மஞ்சள் நிறப் பாலை வடித்துஅகற்ற வேண்டும்.
- தோலை அகற்றியபின் உள்ளே உள்ள ஜெல்லை பிரித்து ஏழு முறை நீரில் கழுவவேண்டும். இவ்வாறு கழுவும்போது அதிலுள்ள 'அலோனின்' என்ற வேதிப்பொருள் அகற்றப்படுகின்றது. இது உடலினுள் உட்செல்லும் போது வயிற்றுப்போக்கு, எரிச்சல் உண்டாகின்றது. ஏழு முறை கழுவும் போது அதிலுள்ள கசப்பு, சுவை மற்றும் நாற்றம் விலகுகின்றது.

கற்றாழைப் பானம் தயாரித்தல்

தேவையானபொருட்கள்

கற்றாழை ஜெல்	- 1.5 கப்
நீர்	- 2 கப்
இஞ்சி	- 1 துண்டு
சீனி	- 4 மேசைக்கரண்டி
தேசிக்காய்	- 1

செய்முறை

பிரித்தெடுக்கப்பட்ட கற்றாழை ஜெல்லுடன் தோல் சீவப்பட்ட இஞ்சியை சேர்த்து மிக்ஸியில் அரைத் தெடுத்து பின் தேசிச்சாறு, சீனி, நீர் சேர்த்து கலக்கிப் பரிமாறலாம்.

குறிப்பு:

சக்கரை நோய்க்கான மருந்து உண்டபின் இப் பானத்தை அருந்தக்கூடாது. இது இரத்தத்தில் உள்ள சக்கரை அளவைக் குறைக்கும்.

சக்கரை நோய், இரத்த அழுத்தம், இரத்தம் உறை-தல் போன்ற நோய்களுக்கு மருந்து எடுத்துக் கொள்பவர்கள் இப் பானத்தினை தவிர்ப்பது சிறந்தது.

இது இரத்தம் உறைதலைத் தடுக்கும் தன்மை கொண்டது. இதனால் உள்ளெடுக்கும் போது அதிக இரத்தபோக்கு ஏற்படும்.

நாள்பட்ட நோய்களுக்கு ஆங்கில மருந்து எடுத்துக் கொள்பவர்கள், கர்ப்பிணிகள், பிரசவித்த பெண்கள், ஒவ்வாமை பிரச்சினை உடையவர்கள் இப் பானம் அருந்துவதை தவிர்க்கவும்.

கற்றாழை லட்டு

தேவையானபொருட்கள்

கற்றாழை ஜெல்	- 300 கிராம்
பால்	- 1 லீற்றர்
நெய்	- 250 மி.லீற்றர்
சீனி	- 300 கிராம்
கோதுமை மா	- 500 கிராம்
பாதாம் பருப்புகள்	- 10 தனி
முந்திரிகை வற்றல்கள்	- 10 தனி

செய்முறை

பிரித்தெடுக்கப்பட்ட கற்றாழை ஜெல்லை சிறு சிறு துண்டுகளாக வெட்டி சூடாக்கிய பாலில் விரைவாக சேர்த்தல் வேண்டும். பாகு பதமாக, தடிப்பாக வரும் வரை 40 நிமிடங்கள் வரை காய்ச்சுதல் வேண்டும். பிறிதொரு பாத்திரம் எடுத்து நெய்விட்டு கோதுமைமா வினை கபிலநிறம் வரும்வரை வறுத்தெடுக்கவும். பின் பாதாம்பருப்பு, முந்திரிகை வற்றல்களைச் சேர்க் கவும். சூடு ஆறியபின் ஏற்கனவே தயாரித்த கற்றாழைப் பாகினையும் சேர்த்து கிளறி 2 நிமிடத் தின் பின் இறக்கவும். சூடு ஆறியபின் சிறு உருண்டை களாகப் பிடித்துப் பரிமாறலாம்.

தொகுப்பு : கிருபாகரன் சுதர்சினி
விவசாயப் போதனாசிரியர்
பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்,
கிளிநொச்சி

ஆடு வளர்ப்பின் மூலம் அதிக வருமானத்தைப் பெறுவோம்

Dr.கிருபானந்தகுமாரன்
[Mvsc]
கால்நடை வைத்தியர்
செட்டிகுளம்

இலங்கையில் அண்மைக் காலத்தில் ஆடு வளர்ப்பு அதிகளவு முக்கியத்துவம் பெறுவதை காணமுடிகிறது. முன்பெல்லாம் கிராமப்புறங்களில் மாத்திரம் அதிகளவில் வளர்க்கப்பட்ட ஆடுகள் தற்போது கிடைக்கும் மிகச் சிறிய இடப்பரப்புக்குள் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வளர்க்கப்படுகின்றன. அதிகளவில் படித்த இளைஞர், யுவதிகளும் ஆடுவளர்ப்பை தமது மேலதிக வருமானம் பெறும் வழிமுறையாக செய்வது ஒரு முன்னேற்றகரமான விடயமாகும். "ஏழைகளின் பசு" என அழைக்கப்படும் ஆடுகள் மிகக்குறைந்த முதலீட்டில் மிகக் குறுகிய காலத்தில் வருமானத்தைத் தரக் கூடியன. அவசரமான சிறிய பணத் தேவைகள் ஏற்படும்போது ஆடுகளை விற்று பணத்தை பெறக் கூடியதாக உள்ளதால் அவற்றை நடமாடும் ATM என்பார்கள்.

என்னதான் ஆடுவளர்ப்பு வருமானம் தரும் தொழில் என்ற போதிலும், சரியான வளர்ப்பு முறைகளும், திட்டமிடல்களும் ஆலோசனைகளும் இல்லை என்றால் அவை தோல்வியில்தான் முடியும். தேவையற்ற பண விரயமும், நேர விரயமும் ஏற்படும். அண்மைக் காலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் மிகப் பெரும் முதலீடுகளுடன் ஆட்டுப் பண்ணைகள் தொடங்கப்பட்ட போதும் நான் முன்பு கூறிய சரியான திட்டமிடலும், ஆலோசனையும் நுட்பமும் இல்லாததால்

அவை இடை நடுவே மூடப்படுகின்றன. இந்தக் கட்டுரை மேற்படி பண்ணைகளின் தோல்விகளை குறைத்து ஆடு வளர்ப்பு தொடர்பான ஆலோசனை வழங்குவதாக அமைகிறது.

பண்ணைக்குரிய இடத் தெரிவு, ஆட்டுக் கொட்டகை அமைத்தல்,ஆட்டு இனங்களின் தெரிவு , தீவன முறைகள் , குட்டிகள் பராமரிப்பு, இனப்பெருக்க மேலாண்மை, பதிவேடு பராமரிப்பு, சந்தை வாய்ப்பு போன்ற முறைகளை சரியாக கையாள்வதன் மூலம் வெற்றிகரமான ஆட்டுப் பண்ணைகளை வெற்றிகரமாக நடத்த முடியும்.

ஆட்டுப் பண்ணைகளை அமைக்கும் போது அதிக மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களாகத் தெரிவு செய்ய வேண்டும். மக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள இடங்கள் எனில் பண்ணைகளின் கழிவுகள் மற்றும் எழும்பும் மணம் தொடர்பான சுகாதார பிரச்சனைகள் ஏற்படும். தாராளமாக தண்ணீர் வசதி கொண்டதாகவும் புற்கள் மரங்களை வளர்க்கும் இட வசதி மிக்கதாகவும் வாகனங்கள் போகக் கூடியதாகவும் இலகுவில் மருத்துவ வசதிகள் கிடைக்கக் கூடிய இடங்களாகவும் அமைய வேண்டும்.

மழை வெயில், வேட்டைவிலங்குகள் மற்றும் நோய்களில் இருந்து பாதுகாக்க கொட்டகைகள் தேவைப் படுகின்றன. அதிக மழை மற்றும் அதிக நீர் தேங்கும் இடங்களுக்கு உயர்த்தப் பட்ட பரண் மேல் கொட்டகைகளும் ஏனைய இடங்களுக்கு நிலக் கீழ் கொட்டகைகளும் பொருத்தமானவை.அண்மைய நாட்களில் மிக குறைந்த அளவு ஆடுகளை வளர்க்கும் பண்ணையாளர்களும் அதிக செலவில் பரண் மேல் ஆட்டுக் கொட்டகைகளை அமைக்கின்றனர். இது உண்மையில் தேவையற்றது .அதிகளவு நிதியை முடக்க கூடியது. மேய்ச்சல் முறையில் வளர்க்கும் உள்ளூர் ஆடுகளுக்கு நிலக் கீழ் கொட்டகைகளே போதுமானது. எனினும் மிக அதிகளவு கலப்பு ஆடுகளை வளர்ப்பவர்களும் வேலையாள் கிடைப்பதில் சிரமம் காணப்படும் பண்ணையாளர்களும் பரண் மேல் கொட்டகைகளை அமைப்பது உகந்தது. ஆடுகளின் சிறுநீர் மற்றும் புளுக்கைகள் இடைவெளிகளினூடாக கீழே விழுவதால் அடிக்கடி சுத்தப் படுத்த வேண்டியதில்லை. நிரந்தரமாகஅதிகளவு ஆடுகளை வளர்க்கும் உள்ளக [intensive] மற்றும் அரை உள்ளக [semi intensive] முறைகளுக்கு உயர்த்தப்பட பட்டிகள் பொருத்தமானவை.

ஒரு வளர்ந்த கிடா மற்றும் மறி ஆட்டுக்கு பதினைந்து சதுர அடி இடைவெளியும் குட்டிகளுக்கு நான்கு சதுர இடைவெளியும் தேவை. நேரடி சூரிய ஒளிபடுவதை தடுக்க ஆட்டுக் கொட்டில்கள் கிழக்கு மேற்காக அமைய வேண்டும். பண்ணையின் உயரமான நல்ல காற்றோட்டம் உள்ள இடமாகக் கொட்டில்களை அமைக்க வேண்டும். கூரைகளை பொறுத்தவரையில் உள்ளூரில் கிடைக்கும் கிடுக்கு மற்றும் வைக்கோலை பயன்படுத்தலாம். அஸ்பெஸ்டாஸ், தகர கூரைகள் பயன்படுத்தும் போது சூரிய கதிர்களை தெறிப்படையச் செய்யவெளியே வெள்ளை பூச்சு அடிக்கலாம். எப்போதும் எதிர்காலத்தை இலக்காக கொண்டே கொட்டகைகள் அமைய வேண்டும். உதாரணமாக ஐந்து ஆடுகளை வளர்க்கும் ஒருவர் எதிர்காலத்தில் பிறக்கும் குட்டிகளை கருத்திற்கொண்டு அதாவது இருபது ஆடுகள் இருக்கத்தக்க கொட்டில்களை அமைத்தால் எதிர் காலத்தில் தேவையற்ற இட நெரிசலை தவிர்க்க முடியும். மீளமீள கொட்டகைகளை பெருப்பிக்க செலவு செய்யத் தேவையும் இல்லை. இருபது ஆடுகளுக்கு மேல் எண்ணிக்கை வராமல் ஆடுகளை விற்பனை செய்யலாம்.முடிந்தவரை மறி ஆடுகள், கிடாய்கள்,வளர்ந்த குட்டிகள் சினை ஆடுகள் என வயதின் அடிப்படையிலும் பருவத்தின் அடிப்படையிலும்

தனிமையாக பிரித்து பிரித்து பராமரித்தால் அவற்றின் நோய், மற்றும் தீவன முகாமைத்துவம் இலகு வானது.

இலங்கையில் நாட்டு ஆடுகள், யமுனாபாரி, சாணன்,போயர்,லங்கா போயர், கொட்டுக்கச்சியா போன்ற ஆட்டு இனங்கள் தூயதாகவோ கலப்பு ஆடுகளாகவோ வளர்க்கப்படுகின்றன. வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் யாழ் குடாநாட்டில் உள்ளூர் ஆடுகளுடன் யமுனாபாரி மற்றும் சாணன் கலப்பு ஆடுகள் வளர்க்கபடுகின்றன. வன்னி பகுதி களில் பெருமளவு நாட்டு ஆடுகளும் சில இடங்களில் யமுனாபாரி கலப்பு ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. அண்மைக் காலமாக இறைச்சிக்கு உகந்த போயர் இனகலப்பு ஆடுகள் வளர்க்க படுவதையும் காண முடிகிறது. இளம் பருவ ஆடுகளே வளர்ப்புக்கு உகந்த வை. சந்தைகளில் வாங்காமல் நேரடியாக பண்ணை களிலே ஆடுகளை வாங்க வேண்டும். இரண்டு குட்டி போடக் கூடிய பெண் ஆடுகளை வாங்குதல் சிறப்பானது. இருபது பெண் ஆடுகளுக்கு ஒரு கிடாயை இனங் கலப்பு செய்ய பயன்படுத்த வேண்டும். உள்முக இனங் கலப்பை [inbreeding] தடுக்க இரண்டு வருடங்க ளுக்கு ஒரு தடவை கிடாயை மாற்ற வேண்டும்.

ஆடுகளை பொறுத்த வரை உணவாக பசுந்தீவனம் மற்றும் அடர்வு தீவனங்களை வழங்க வேண்டும். பசுந்தீவனமாக புல், மர இலைகள் மற்றும் அவரை இன தாவரங்களை வழங்கலாம். உள்ளூர் ஆடுகளை பொதுவாக மேய்ச்சலுக்கு கொண்டு செல்லுவார்கள். காடுகளை அண்மித்த பற்றைகள் மற்றும் புல்வெளிகளில் மேயும் இவற்றுக்கு அடர்வு தீவனம் தேவையில்லை.எனினும் உள்ளக மற்றும் அரை உள்ளக முறையில் கலப்பு ஆடுகளை வளர்க்கும் போது பசுந்தீவனத்துக்கு மேலதிகமாக அடர்வு தீவனங்களை வழங்க வேண்டும்.

பெரிய ஆடுகளுக்கு 200 கிராம் வரையிலும் குட்டிகளுக்கு 50-100 கிராம் வரையில் சமசீரான அடர்வு தீவனத்தை வழங்கலாம்.பெரிய ஆடுகளுக்கு சினைப் பருவம் மற்றும் பாலூட்டும் சந்தர்பத்தில் 400-450 கிராம் வரை அடர்வு தீவனத்தை வழங்க லாம். ஒருமாத வயதுடைய குட்டி பருவத்திலிருந்து சிறிது சிறிதாக அடர்வு தீவனத்தை உண்ணப்பழக்க வேண்டும்.

ஆடுகள் பொதுவாக மரத்தில் இருக்கும் இலைகளை எழும்பி உண்ணும் பழக்கமுடையதால் நிலத்தில் சிந்தும் பசுந்தீவனத்தை உண்ண விரும்பாது. எனவே கொட்டகைகளில் அவற்ற கட்டி விடுதல் உசித மானது. உள்ளூரில் கிடைக்கும் இத்தி,பலா, ஆல்,வேம்பு,வாகை,பனை போன்ற இலைகளையும் கிளிசிடியா ,அகத்தி போன்றவளர்ப்பு மர இலைகளை யும் கொடுக்கலாம். வறட்சிக் காலத்துக்காக ஊறுகாய் புல்லை [silage] சேமித்து வழங்கலாம்.அடர்வு தீவன செலவை குறைக்க ஆசோலா போன்றவற்றை யும் வழங்கலாம்.ஒரு பண்ணையின் அதிகளவான செலவு தீவனத்துக்குதான் போகிறது என்பதால் முடிந்தவரை உள்ளூரில் கிடைக்கும் தரமான மாற்றுஉணவை வழங்க முயற்சிக்க வேண்டும். முடிந்தவரை சுத்தமான தண்ணீர் எப்போதும் கிடைக்கும் வகை செய்தல் வேண்டும். ஆடுகளை ஒவ்வொரு வயது பிரிவுக்கு ஏற்ற வகையில் உணவி னை தனித்தனியே வழங்குதல் மூலம் சகல பருவ ஆடுகளும் சமசீராக உணவை உண்பதை உறுதிப் படுத்தலாம்.ஒன்றாக எல்லா ஆடுகளையும் வைத்து உணவூட்டினால் சிறிய மற்றும் இளம்பருவ ஆடு களுக்கு தீவனம் சரியாக கிடைக்காது.
ஆடுகளுக்கு தீவனத்துக்குமேலதிகமாக கனியுப்பு

கலைவைகளை வழங்குதல் வேண்டும் . இது ஆடுகளில் பால் காய்ச்சல் வராமல் தடுப்பதோடு தீவனத்தில் கிடைக்காத நுண்ணூட்ட சத்துக்களை வழங்கும்.

ஆடுகளுக்கு இலங்கையில் ஏற்புவலி தடுப்பூசி [Tetanus toxoid] வழங்கப்படுகிறது.பிறந்த ஒரு சில நாட்களிலும் அதன் பிறகு மூன்று கிழமை யிலும் ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒரு முறையும் ஏற்பு ஊசிகளை போட வேண்டும்.அத்துடன் குடற்புழு நீக்க மருந்துகளையும் கிராமமாக வழங்க வேண்டும். பிறந்து மூன்று கிழமை , பிறகு மூன்று மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கு வதோடு வருடம் தோறும் நான்கு முறை குடற்புழு மருந்துகளை கால்நடை வைத்தியரின் பரிந்துரைக்கு ஏற்ப வழங்க வேண்டும்.

இலங்கையில் அதிகளவில் ஆட்டுக் குட்டிகளின் இறப்பு நிகழ்கிறது.குளிர் காரணமாகவும் குடற்புழு தாக்கம் காரணமாக ஏற்படும் கழிச்சல் ,சுவாச பிரச்சனை மற்றும் தாயில் பால் குறைவு காரண-மாகவே அதிக குட்டிகள் இறகின்றன.முடிந்தவரை குடற்புழு மருந்து கொடுப்பதன் மூலமும் தடுப்பூசி களை சரியாக வழங்குவது மூலமும்தேவையற்ற ஆடுகளின்நெரிசலை குறைப்பதன் மூலமும் குளிர் காலத்தில் வெப்பமூலங்களை வழங்குவதன் மூல மும் பிறந்த குட்டிகளுக்கு கடும்பு பாலை சரியாக வழங்குவதன் மூலமும் அதிக குட்டி மரண வீதத்தை குறைக்க முடியும். மழைக்கு பின்னரான காலப் பகுதியில் ஏற்படும் நுளம்புப் பெருக்கம் காரணமாக ஏற்படுகிறது.ஆடு மாடுகளை அருக ருகே வளர்ப்பதை குறைப்பதன் மூலமும் இரவில் நுளம்புகளுக்கு புகை போட்டும் சோர்வு வாதத்துக்கு எதிரான மருந்துகளை அந்த பருவ காலத்தில் கால்நடை வைத்திய ஆலோசனையுடன் வழங்குவது மூலமும் இந்த நோய் வராமல் தடுக்க லாம்.

ஆட்டுப்பண்ணைத் தொழில் ஒரு வியாபாரம் என்ற வகையில் வரவு செலவு குட்டிகளின் பிறப்பு இறப்பு விற்பனை தீவன விபரம் என சகல பதிவுகளையும் ஒழுங்காகப் பேணுவதன் மூலம் பண்ணையின் போக்கை சரியாக அனுமானிக்க முடியும் என்பது டன் தேவையான மாற்றங்களையும் செய்யமுடி யும்.

பெரும்பாலும் ஆடுகள் இடைதரகர் மூலமே விற்கப் படுகின்றன. இதன் காரணமாக பண்ணையாளர் கள் சரியான வருமானத்தை பெறுவதில்லை. வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக ஆடுகளையும் ஆட்டிறைச்சியையும் விற்பதன் மூலம் அதிக வருமானத்தை பெற முடியும். ஊரிலுள்ள சகல ஆட்டுப் பண்ணையாளர்களும் இணைந்து பொது வான விலையை தீர்மானித்தால் நட்டமடைவதை தவிர்க்கலாம்.இன்று ஒருகிலோ ஆட்டிறைச்சி ஆயிரத்து ஐந்நூறு முதல் இரண்டாயிரம் வரை போகிறது.எனினும் உயிர் நிறை நாட்டு ஆடு அறுநூறு வரையே போகிறது. கலப்பு ஆடுகள் சிறிது அதிகமாக இருக்கிறது.வாடிக்கையாளரின் தேவை அதிகமாக இருகின்ற போதும் அதற்கேற்ப ஆட்டிறைச்சி கிடைபதில்லை.இப்போது அதிகளவு வளர்ப்புக்கு ஆடுகள் வாங்கப்படுகின்ற காரணத்தால் ஆட்டுப் பண்ணையம் நிச்சயம் தோல்வியடை யாது. எனவே நான் கூறிய விடயங்களை சரிவர ஒழுங்கமைத்து ஆட்டுப் பண்ணையின் மூலம் அதிக வருமானத்தை பெற முடியும்.

மண் மேலாண்மையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வகிபாகம்

எந்திரி.ந.சுதாகரன்,
மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

1.0 அறிமுகம்

மனிதனின் சிறந்த வாழ்க்கைக்கு நல்ல ஆரோக்கியமான மண் தேவையாகவுள்ளது. இதனையே சங்கப் புலவராகிய குடப்புலவியனார் உணவு எனப்படுவது "நிலத்தோடு நீரே" என்கிறார். உணவாய் மாறும் திறம் படைத்தவையே நிலமும் நீரும் என்பது பொருளாகும். மனிதனின் அடிப்படைத்தேவைகளில் பிரதான மான உணவுத் தேவையின் 95 வீதம் மண்ணிலிருந்தே பெறப்படுகிறது. மண் இந்த உலகிலுள்ள எல்லா உயிரினங் களும் இனப்பெருக்கம் செய்து தம் வம்சத்தை வளர்த்துக் கொள்ள புகலிடமாக இருக்கிறது ஆனால் மண் தன்னைத்தானே இனப்பெருக்கம் செய்து கொள்வதில்லை. அத்தகைய அருந்தல் மண்ணை பாதுகாப் பதன் மூலமே உயிர்களையும் இந்த பூமியையும் நாம் பாதுகாத்துக் கொள்ளமுடியும். எமது பல பேராசை கொண்ட செயற்பாடுகளாலும் விழிப்புணர்வற்ற செயல்களாலும் மண்ணின் வளம் குறைந்து கொண்டும் பூமியின் அழகு குறைந்து கொண்டும் செல்கிறது. இத்தருணத்தில் நாம் விழிப்புணர்வு கொண்டு ஆவன செய்யத் தவறின் மிகவும் மோசமான விளைவுகளையே எம் எதிர்கால சந்ததி எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். 2050 ம் ஆண்டு உணவுத் தேவை 60 வீதத்தினால் அதிகரிக்கும் எனவே மண்ணை வளப்படுத்தவும் மேம்படுத்தவும் அதிலிருந்து உணவு உற்பத்திகளை அதிகரிக்கவும் பொருத்த மான செயற்பாடு களை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது.

2.0 மண்ணின் முக்கியத்துவம்

ஆரோக்கியமான மண் உலகின் உயிர்நாடியாகும், நிலையான உணவு விநியோகத்தை உறுதி செய்கிறது, சுத்தமான தண்ணீரைப் பாதுகாக்கிறது, பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிக்கிறது மற்றும் காலநிலை மாற்றத் தைத் தணிக்க உதவுகிறது. மண் எண்ணையைவிட மதிப்புமிக்கது. மண்ணுடன் தொடுகை கொள்ளும் போது அது இயற்கையாகவே எமக்கு சிகிச்சையளிக்கிறது. தாவரங்களுக்குத் தேவையான இயற்கையாக நிகழும் 18 இரசாயனத் தனிமங்களில் 15ஐ மண் வழங்குகிறது. இவ்வாறு பல நன்மைகளை வழங்குவதாக வும் வாழ்விற்கு மிக முக்கிய பங்களிப்பை ஆற்றுவதாகவும் மண் திகழ்கிறது..

3.0 எதிர்நோக்கும் மண் தொடர்பான சவால்கள்

உலக ரீதியில் பார்க்கும்பொழுது சராசரியாக 33 வீதமான மண் சிதைவடைந்து போய்விட்டது. எமது பிரதே சங்களிலும் பல வளமான நிலங்கள் உவர்த்தன்மையான நிலங்களாகவும் விவசாயம் மேற்கொள்ளமுடியாத தரிசு நிலங்களாகவும் மாற்றமடைந்து காணப்படுகின்றன. அத்துடன் தொடர்ச்சியாக இதன் அளவு அதிகரித் துக் கொண்டும் செல்கிறது. எமக்குரிய உணவினை நாமே உற்பத்தி செய்து பெற்றுக் கொள்ள முடியாமல் பிற இடங்களில் தங்கியிருக்கும் நிலை காணப்படுகிறது. எதிர்காலத்தில் உணவுத் தேவை அதிகரிக்கும் போது எமக்குரிய உணவை பெறுவதில் மிகப்பெரிய சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். மண்ணை வளப்படுத்துவதில் அக்கறையற்ற தன்மையும் .விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்

அசமந்த போக்கும் மிகவும் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்த வல்லனவாகவே காணப்படுகிறது.

4.0 தீர்வுப் பொறிமுறைகள்

2050ல் உலகளாவிய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய விவசாய உற்பத்தியை 60% அதிகரிக்க வேண்டியிருக்கிறது. நிலையான மண் முகாமைத்துவம் மூலம் 58% அதிக உணவை உற்பத்தி செய்ய முடியும். எனவே நிலையான மண் முகாமைத்துவத்தை எம் மண்ணில் மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. மண் உவர்த்தன்மையாவதை தடுத்தலும் உவர்த்தன்மையான மண்ணையும் தரிசு நிலங்களையும் வளப்படுத்தலும் மேம்படுத்தலும் மீண்டும் விவசாயத்திற்கு உட்படுத்தலும் அதேபோல விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளாத நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவித்தலும் நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளாகும். அத்துடன் மண் தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் ஏற்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகும்.

5.0 நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

மண் வளத்தினை பேணுவதிலும் மேம்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்பினை வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் எமது பிரதேசத்தில் மேற்கொண்டுவருகிறது. தன்னிறைவான உணவு உற்பத்தியினை ஏற்படுத்தும் முகமாக விவசாய நடிவடிக்கைக்கு தேவையான நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் பல நீர்சார் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் தனக்குரிய வகிபாகத்தை மேற்கொள்கிறது. மண்ணில் உவர்நீர் உட்புகுவதை தடுப்பதும் மண்ணின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதும் ஆரோக்கியமான மண்ணாக வைத்திருக்கும் மண் முகாமைத்துவதில் பிரதானமாக அமைகிறது. அந்தவகையில் பின்வரும் திட்டங்கள் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

5.1 நீரேரி திட்டங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள நீரேரியினை சுற்றியுள்ள விவசாயநிலங்களில் 11000 ஏக்கர் நிலங்கள் விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலமாகவும் 20000 ஏக்கர் நிலங்கள் விவசாயம் செய்தலும் விளைச்சல் மிகக் குறைந்த நிலங்களாகவும் உள்ளன. உவர்த்தன்மையான இந்நிலங்களை மீட்டெடுக்கும் நோக்கில்

வடமராட்சி மற்றும் உப்பாறு நீரேரித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு தொண்டைமானாறு மற்றும் அரியாலையில் தடுப்பணைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. காலத்திற்கு காலம் மேம்படுத்தல் மற்றும் புனரமைப்பு வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக ஆக்கப்பூர்வமான பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அத்துடன் மேலும் ஆரோக்கிய மண் வளமாக மாற்றுவதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

5.2 உவர்நீர்த் தடுப்பணைகள்

கடல்நீர் உட்புகுந்து நிலங்களையும் நீர்வளத்தையும் உவர்த்தன்மையாக்குவதை தடுப்பதற்காகவும் உவரான நிலங்களை மீட்டெடுப்பதற்காகவும் உவர்நீர்த்தடுப்பணைகள் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் தீவகங்கள் மற்றும் கரையோரங்களை அண்டி 34 உவர்நீர்த் தடுப்பணைகளும் அத்துடன் பூநகரி மற்றும் மன்னார் பிரதேசங்களிலும் உவர்நீர்த் தடுப்பணைகளும் உருவாக்கப்பட்டு நிலங்களை ஆரோக்கியமான நிலங்களாக பேண நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

5.3 குளங்களும் நீர்ப்பாசனமும்

வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 54 பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் காணப்படுகின்றன. இக்குளங்களிலிருந்து நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பல விவசாயநிலங்களை ஆரோக்கியமான நல்ல நிலங்களாக பேண வழி வகை செய்யப்படுகிறது. நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் விவசாயநிலங்களின் வளத்தையும் விஸ்தீரணங்களையும் அதிகரிக்கமுடிகிறது.

5.4 புதிய உத்திகள்

குளத்தின் கீழுள்ள விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாத பல விவசாயநிலங்களை மீண்டும் விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்தும் முகமாக பல புதிய உத்திகளும் எம்மால் கையாளப்படுகின்றன. அந்த வகையில் கடந்த காலங்களில் வவுனிக்குளத்தில் டீநவாஅய எநலவநஅ நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வுத்தி மிகவும் வெற்றியளித்தது. அத்துடன் இடைபோகங்கள் செய்வதற்குரிய ஏற்பாடுகளும் மாற்றுப் பயிர்கள் செய்யும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அவைகளும் வெற்றியளித்தன.

6.0 பரிந்துரையும் முடிவுரையும்

எமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவும் தன்னிறைவான நிலைபேறான வாழ்வியலை நாம் வாழவும் ஆரோக்கியமாக மண்ணை வைத்திருக்கும் மண் முகாமைத்துவம் மிகவும் முக்கியத்தும் பெறுகிறது. அத்துடன் எதிர்கால சவால்களை எதிர்நோக்கும் முகமாகவும் எதிர்கால உணவுத்தேவையினை தன்னிறைவாக பூர்த்தி செய்யும் முகமாகவும் மண் வளத்தினை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தக்க செயலினை இன்றே ஆற்றவேண்டியிருக்கிறது. அந்த வகையில் நீர்ப்பாசனத் திணைக்களம் தனது வகிபாகத்தை செவ்வனே செய்து வருகிறது. வளங்களை பராமரித்து பாதுகாப்பதுடன் புதிய புதுமையான ஆக்க பூர்வமான ஒருங்கிணைந்த திட்டங்களையும் காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தி வருகிறது. அத்துடன் அனைவரும் மண் தொடர்பில் விழிப்புணர்வு கொண்டு செயற்படுவதும் காலத்தின் தேவை என்பதையும் சொல்லிக் கொள்கின்றோம்.

வீட்டுத் தோட்டம்

01 - அறிமுகம்

பண்டைக் காலத்திலிருந்தே மனிதர்கள் தமது வீடுகளுக்கருகே மரக்கறிகள். பழவகைகள், சரக்குப் பயிர்கள், வாசனைப்பயிர்கள் மூலிகைத் தாவரங்கள் பூக்கள் பலகைகளைப் பெறக் கூடிய மரங்கள் ஆகிய வற்றை செய்கை பண்ணி வந்துள்ளனர்.இதன் மூலம் சூழலைச் சுத்தமாகவும் அலங்காரமாகவும் வைத் திருப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். வீடுகளுக்கு அருகேயுள்ள நிலத்தில் பயன்தரக் கூடிய தாவரங் களையும், அலங்காரத் தாவரங்களையும் செய்கை பண்ணுவதை வீட்டுத்தோட்டமாக கருத முடியும். வீட்டுத் தோட்டமொன்றை பராமரிப்பதற்கு 1000 சதுர மீற்றர்(1/4 ஏக்கர்) அல்லது இதை விடக் குறைந்த அளவு இடம் போதுமானதாகும். வீட்டுத் தோட்டம் ஒன்றிலிருந்து பல நன்மைகளை நாம் பெறமுடியும்.

தமக்குத் தேவையான மரக்கறிகளையும் பழங்களையும் வீட்டுத் தோட்டத்திலே உற்பத்தி செய்வதினால் பல நன்மைகளைப் பெற முடியும்.

- குடும்ப அங்கத்தவர்கள் விரும்பும் போசாக்கான உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- அரிதாகக் காணப்படும் நிலத்திலிருந்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- தேவையானபோது அறுவடை செய்ய முடியும்.
- தாவரங்கள் வீட்டைச் சுற்றிக் காணப்படுவதால் குளிர்ச்சியாக இருப்பதுடன் அலங்காரமாகவும் இருக்கும்.
- மரக்கறிகள் பழங்கள் மரப் பலகைகள் மூலிகைகள் வாசனைப் பயிர்கள் ஆகியவற்றின் மூலம் பொருளாதார நன்மைகளைப் பெற முடியும்.
- நஞ்சில்லதா உருசியான புதிய மரக்கறிகளையும் பழங்களையும் உண்ண முடியும்.
- குடும்பத்தில் உள்ள அனைவரும் தமது ஓய்வு நேரத்தை வீட்டிலிருந்தபடியே பிரயோசனமாக செலவிட சந்தர்ப்பம் ஏற்படும்
- சந்தைக்குச் செல்வதால் ஏற்படும் செலவையும் நேரத்தையும் மீதப்படுத்த முடியும்
- உடற்பயிற்சியும் மனதிற்கு அமைதியும் கிடைக்கும்

கைத்தொழில் அபிவிருத்தி, நகர மயமாக்கல் ஆகிய காரணிகளால் மக்கள் தமது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய சந்தைகளுக்குச் செல்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் உணவுப் பொருட்கள் உற்பத்தி வர்த்தகமயமடைந்துள்ளது. இதனால் கிராமப்புற மக்கள் கூட தமது மரக்கறிகள் பழங்கள் ஆகிய

வற்றின் தேவையைப் பூர்த்தி செய்ய சந்தையே நாடுகின்ற னர். இதனால் இவற்றின் கிராக்கி அதிகரித்துள்ளது. ஆனால் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் உற்பத்தி அதிகரிக்கவில்லை. இவற்றின் காரணமாக விலை கூடிய பொருட்கள் விவசாய இரசாயனங்கள் விசிறப்பட்ட தரமற்ற நுகர்ச்சிக்கு உதவாத மரக்கறிகளை யும் பழங்களையும் சந்தையில் விற்பனை செய்வதனால் பல பிரச்சினைகளையும் நுகர்வோர் எதிர் நோக்கியுள்ள னர்.

வீட்டுத் தோட்டங்களைச் செய்கை பண்ணுவதில் ஆர்வ மின்மையால் பல சமூகப் பொருளாதார சூழல் பிரச்சினைகள் தோன்றியுள்ளனர். வர்த்தகமயமான பயிர்ச்செய்கை பரவுவ தால் காடுகளை அழித்தல் மண்ணரிப்பு நீர் மூலவளங்கள் அழிவடைதல் போன்ற பல பிரச்சனைகள் காணப்படுகின் றன. இப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு வாழ்வதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்கவும் இரசாயனங்களால் நஞ்சுட்டப்படாத மரக்கறிகள் பழங்கள் உற்பத்தி செய்வதற் கும் எம்மால் இலகுவாக நடவடிக்கை எடுக்க முடியும். இதற்கு நாம் செய்யவேண்டியுள்ளது எமது மூதாதையின ரைப் போலவே நாமும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடுவதாகும்.

2. எமக்குத் தேவைப்படும் மரக்கறிகளையும் பழங்களையும் ஏன் நாமே உற்பத்தி செய்ய வேண்டும்.

அதிகரித்த விலை

மரக்கறிகள், பழங்கள் என்பன ஒரு வருடத்தில் குறிப்பிட்ட காலத்திலேயே அறுவடை செய்யப்படுகின்றன. இதனால் ஏனைய காலங்களில் இவை அரிதாகக் காணப்படுகின்றன. இதனை விட எதிர்பாராத காலநிலைப் பாதிப்புகளினாலேயே உற்பத்தி குறைவதற்கும் இடமுண்டு. எனவே அநேகமான சந்தர்ப்பங்களில் பழங்கள் மரக்கறிகளின் விலை அதிகமாக இருக்கும்.

ஆபத்து விளைவிக்கக்கூடிய விவசாய இரசாயனங்கள் அடங்கியிருத்தல்

வர்த்தக நோக்கில் மரக்கறிகளையும் பழங்களையும் செய்கைபண்ணும் போது நோய்கள, பீடைகளின் தாக்கம் பரவலாக ஏற்படும். இவற்றைக் கட்டுப்படுத்தவும் விவசாய இரசாயனங்கள் விசிறப்படுகின்றன. பீடை நாசினிகளில் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நச்சுப்பொருட்கள் காணப்படுவதால் இவற்றை விசிறி 2-3 வார காலம் வரை அறுவடை செய்யக்கூடாது. சில விவசாயிகள் இரசாயனங்களை விசிறி இரு கிழமைகளுக்கு முன்னரே அறுவடை செய்து சந்தைக்கு அனுப்பி விடுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதே போல் எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாது விவசாய இரசாயனங்களைப பயன்படுத்துவதை நாம்அறியக் கூடியதாக இருக்கிறது. எனவே சந்தைகளிலும் விற்பனை செய்யப்படும் மரக்கறிகளிலும் பழங்களிலும் பல சந்தர்ப்பங்களில் தீங்கு விளைவிக்கக்கூடிய விவசாய இரசாயனங்கள் காணப்படலாம்.

உருசியும் தரமும் குறைவடைதல்

அறுடை செய்து சில நாட்கள் செல்ல மரக்கறிகளின் உருசியும் போசணைச் சத்துக்களும் படிப்படியாகக் குறை

யும். சந்தைகளில் நாம் மரக்கறிகளையும் பழங்களையும் வாங்கும்போது அவை பொதுவாக அறுவடை செய்து 3-6 நாட்கள் கடந்தவையாகவும் இருக்கும். இதனால் இவற்றின் உருசியும் தரமும் குறைந்தே காணப்படும்.

நுகர்ச்சிக்கு உதவாத மரக்கறிகளும் பழங்களும்

பெரும்பாலான மரக்கறிகளை முதிர்ச்சி அடைய முன்னரும் பழங்களை நன்கு முதிர்ச்சி அடைந்த பின்னருமே அறுடை செய்ய வேண்டும். ஆனால் நுகர்ச்சிக்கு தகுதியற்ற நன்கு முதிர்சி அடைந்த மரக்கறிகளும் விற்பனை செய்யப்படுகின் றன. மேலும் நாட் கடந்த மரக்கறிகளும் பழங்களும் விற்பனை செய்யப்படுகின்றன. இவையும் பாவனைக்கு பொருத்தமற்றவை ஆகும். இதன் மூலம் பாவனையாளர்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கூடிய கிராக்கியின் காரணமாக எதிர்காலத்தில் இது போன்ற பிரச்சினைகள் மென் மேலும் அதிகரிக்கும். எனவே எமக்குத் தேவையான பழங் களையும் எமது வீட்டுத் தோட்டங்களையும் உற்பத்தி செய்வதற்கு நாம் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது. வீட்டுத் தோட்டத்திலே வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து வேலை செய்வது மனதிற்கு மகிழ்ச்சியும் வீட்டிற்கு சுத்தமான சூழலையும் வழங்கக்கூடிய ஒரு பயனுள்ள முயற்சியாகும்.

10.10.2023 அன்று சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற **NVQ** சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் அலகின் ஏற்பாட்டில் 17.11.2022 அன்று வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைபெற்ற மரம் நடுகை நிகழ்வு